சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – சென்னையில் 11.12.2013 முதல் 13.12.2013 வரை நடைபெற்ற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 100 ஏழை எளிய மாணவியர் பயன்பெறும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி புதிதாக துவங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1)துறை

அரசாணை (நிலை) எண். 23 நாள்: 26.02.2014

திருவள்ளுவர் ஆண்டு 2045
விஜய, மாசி 14

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் கடித எண். பி4/2504/2013, நாள். 19.12.2013.

* * * * * *

ஆணை:

சென்னையில் 11.12.2013 முதல் 13.12.2013 வரை நடைபெற்ற அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறிவிப்பு எண். 135

**“100 ஏழை எளிய மாணவியர் தங்கும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் கல்லூரி மாணவிகளுக்கான புதியதாக விடுதி ஒன்று துவங்குதல்.”**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களின் நலனுக்காக நடப்பாண்டில் (2013–14) புதியதாக துவங்க உத்தரவிடப்பட்ட 10 விடுதிகளுடன் சேர்த்து மொத்தம் 1304 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 715 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 576 விடுதிகளும், சிறுபான்மையினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 13 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. புதிதாக துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அரசு கலைக்கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி செவ்வனே செயல்பட, 100 மாணவியர் எண்ணிக்கை கொண்ட விடுதிக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது எனவும், எனவே, கீழ்க்கண்ட விவரப்படியான

பணியிடங்களை ஏற்படுத்திடவும், அப்பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக அறிவிக்குமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியுள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

4. கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி (100 மாணவியர்கள்) துவங்குவதால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ.24,50,600/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.3,39,150/–ஐ சேர்த்து மொத்தம் ரூ.27,89,750/– ஒப்பளிப்பு செய்யுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

5. எனவே, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி (100 மாணவியர்கள்) ஒன்று புதியதாக துவங்க அனுமதியளித்தும், இப்புதிய விடுதி துவங்குவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடராச் செலவினம் ரூ.2,65,750/–ம் மற்றும் தொடரும் செலவினம் ரூ.23,30,600/–ம் ஆக மொத்தம் ரூ.25,96,350/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து முந்நூற்று ஐம்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், இத்துறையில் புதிதாக துவங்க அனுமதியளிக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதிக்கு கீழ்கண்டவாறு பணியிடங்களை 4 (காப்பாளர் + சமையலர் + காவலர் / ஏவலர்) பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், 1 பணியிடத்தை (துப்புரவு பணியாளர்) தொகுப்பூதிய அடிப்படையிலும் தற்காலிகமாகத் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |
| மொத்தம் | | | 5 |

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி– 1 – (ரூ.25.96,350/–)</u>

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –03– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II மாநில திட்டம் – JA –பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ. | ஆண்டொன்றிற்கு ஏற்படும் தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் (DPC 2225-03-277-JA-0106) | 12,20,400 | --- |
| 05 அலுவலகச் செலவினங்கள் – 05 அறை கலன்கள் (DPC 2225-03-277-JA-0553) | --- | 30,000 |
| 06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் – 01 வாடகை (DPC 2225-03-277-JA-0615) | 1,20,000 | --- |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (DPC 2225-03-277-JA-1918) | --- | 25,000 |
| 24 – 00 பொருட்களும், வழங்கலும் (DPC 2225-03-277-JA-2408) | --- | 1,70,750 |
| 34 ஏனைய செலவுகள் – 01 ஏனைய இனங்கள் (DPC 2225-03-277-JA-3416) | 77,700 | --- |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் (DPC 2225-03-277-JA-3425) | --- | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள் – 09 ஏனையவை (DPC 2225-03-277-JA-6799) | 9,12,500 | --- |
| மொத்தம் | 23,30,600 | 2,65,750 |

| ஒரு கல்லூரி மாணவியர் விடுதி திறப்பதற்கான தொடர் செலவின விவரம் | | | |
|---|---|---|---|
| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | கல்லூரி விடுதி (ரூ.) |
| 1. | ஒரு பி.எட். பட்டதாரி போதக காப்பாளர் / காப்பாளினி பணியிடம் கிரேடு ஊதியம் (ரூ.9300–34800 + ரூ.4600 என்ற ஊதிய ஏற்ற முறை) (ரூ.50230 x 12) | | 6,02,760 |
| 2. | இரு சமையலர் பணியிடம் கிரேடு ஊதியம் (சமையலர் I மற்றும் சமையலர் II) (ரூ.4800–10000 + ரூ.1300 என்ற ஊதிய ஏற்ற முறை) (ரூ.16490 x 12 x 2) | | 3,95,760 |
| 3. | ஒரு காவலர் மற்றும் ஏவலர் பணியிடம் (ரூ.4800–10000 + ரூ.1300 என்ற ஊதிய ஏற்ற முறை) (ரூ.16490 x 12) | | 1,97,880 |
| 4. | ஒரு துப்புரவு பணியாளர் (மாதம் ரூ.2000/– தொகுப்பூதியத்தில்) | | 24,000 |
| 5. | 100 மாணவர்கள் மற்றும் 2 சமையலர்களுக்கான உணவு கட்டணம் (ரூ.875 x 10 x 102) கல்லூரி விடுதி | | 8,92,500 |
| 6. | சிறப்பு உணவு கட்டணம் (ரூ.40 x 5 x 100) | | 20,000 |
| 7. | விடுதி வாடகை ரூ.10000/– மாதம் ஒன்றுக்கு | | 1,20,000 |
| 8. | செய்தித்தாள் | | 2,700 |
| 9. | சோப்பு மற்றும் தேங்காய் எண்ணெய் (ரூ.75 x 10 x 100) கல்லூரி விடுதி | | 75,000 |
| மொத்தம் | | | 23,30,600 |

| ஒரு கல்லூரி மாணவியர் விடுதிக்கான தொடரா செலவின நிதி விபரம் | | |
|---|---|---|
| வ.எண். | பொருள் | கல்லூரி விடுதி ரூ. |
| 1. | எரிவாயு இணைப்பு | 30,000 |
| 2. | நூலக வசதி | 30,000 |
| 3. | பாத்திரங்கள் | 30,000 |
| 4. | மரச்சாமான்கள் | 30,000 |
| 5. | அரவை இயந்திரம் | 12,500 |
| 6. | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| 7. | இன்வார்ட்டர் | 15,000 |
| 8. | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| 9. | பாய் (ஒன்று ரூ.60/– வீதம் 100 x 60 = 6000) | 6,000 |
| 10. | கல்லூரி விடுதி பெட்ஷீட் (ஒன்று ரூ.180/– வீதம் 100 x 180) | 18,000 |

| | | |
|---|---|---|
| 11. | பாடக்குறிப்பு புத்தகம் | 10,000 |
| 12. | தட்டு மற்றும் டம்ளர் (ஒன்று ரூ.75/– வீதம் 100 x 75) | 7,500 |
| 13. | முதலுதவி பெட்டி | 650 |
| 14. | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 |
| 15. | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 6,000 |
| 16. | புத்தக அலமாரி | 10,000 |
| 17. | மின் அரைப்பான் | 6,000 |
| 18. | இட்லி வேகவைப்பான் | 8,000 |
| 19. | சுகாதார குட்டைதகளி (Napkin Incinerator) | 25,000 |
| மொத்தம் | | **2,65,750** |

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் “புது துணைப்பணி” குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையில் தனியே வெளியிடப்படும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவு செய்யத் தேவையான முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு துணை மானியக் கோரிக்கைகளில் சேர்த்திட ஏதுவாக விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதித் (வரவு–செலவு பொது–I) / (பி.மி.பி. (ம) சி.ந.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேற்கண்ட புதிய விடுதி முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா. எண். 11717/CMPC/2014, நாள். 26.02.2014, மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 45 (நாற்பத்தைந்து)–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–1), சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–2), சென்னை– 18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், கிருஷ்ணகிரி.
மாவட்ட கருவூல அலுவலர், கிருஷ்ணகிரி.

<u>நகல்:</u>
நிதித் (பி. மி.பி./வ.செ.பொது I / மைய.ம,ஆ.பி. / வ.செ. பொது II) துறை, சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையிர் நலத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல
(பிந3)த் துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/2/14
பிரிவு அலுவலர்.